විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍යාංශය
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
MINISTRY OF FOREIGN AFFAIRS, FOREIGN EMPLOYMENT AND TOURISM

**ஊடக வெளியீடு**

**சித்திரவதை தடுப்புக்கான ஐக்கிய நாடுகள் சபையின் துணைக்குழுவின் இலங்கை விஜயம்**

ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதை தடுப்புக்கான துணைக்குழு (SPT), 2026 ஜூன் 15 முதல் 24 வரை இலங்கைக்குத் தனது இரண்டாவது பயணத்தை மேற்கொள்ளவுள்ளது.

சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கையின் விருப்பத்தேர்வு நெறிமுறையில் (OPCAT) இலங்கை 2017 டிசம்பரில் இணைந்ததைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதை தடுப்புக்கான துணைக்குழுவானது (SPT) தனது இலங்கைக்கான முதல் பயணத்தை 2019 ஏப்ரலில் மேற்கொண்டது. அதனைத் தொடர்ந்து, சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கையின் விருப்பத்தேர்வு நெறிமுறையின் (OPCAT) கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது (HRCSL) இலங்கை அரசாங்கத்தால் தேசிய தடுப்புப் பொறிமுறையாக (NPM) நியமிக்கப்பட்டது.

எதிர்வரும் தமது விஜயத்தின் போது, நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதை தடுப்புக்கான துணைக்குழுவானது (SPT) அமைச்சர்கள் மட்டத்தில் சந்திப்புகளை நடத்துவதோடு, தொடர்புடைய அரசாங்க அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. மேலும் இத்தூதுக்குழுவானது, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளையும், குடிமைச் சமூக உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையுடனான தனது தொடர்ச்சியான ஈடுபாட்டுக் கொள்கைக்கு இணங்கவும், அரசியலமைப்பிற்கு ஏற்ப, சம்பந்தப்பட்ட சர்வதேச ஆவணங்களில் பொறிக்கப்பட்டுள்ள மற்றும் தானாக முன்வந்து மேற்கொள்ளப்பட்ட தனது உடன்படிக்கை அமைப்பின் கடமைகளை நிறைவேற்றும் வகையிலும், இலங்கை அரசாங்கம் இத்துணைக்குழுவுடன் வெளிப்படையானதும், ஆக்கப்பூர்வமானதும் மற்றும் ஒளிவுமறைவற்றதுமான முறையில் ஈடுபடும்.

இத்தூதுக்குழுவில் செல்வி ஐஷா ஷுஜூன் முஹம்மது (மாலைத்தீவு) (தூதுக்குழுத் தலைவர்); திரு. ஜேகப் ஜூலியன் செபெக் (போலந்து); செல்வி அனிகா டொம்சிக் (க்ரோஷியா); மற்றும் திரு. நிகா க்வாராட்ஸ்கெலியா (ஜோர்ஜியா) ஆகியோர் இடம்பெறுவார்கள். சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ள துணைக்குழு செயலகத்தின் அதிகாரிகளும் அவர்களுடன் இவ்விஜயத்தில் இணைந்துகொள்வார்கள்.

தூதுக்குழுவின் இவ்விஜயமானது, அவர்களின் ஆணையின்படி மேற்கொள்ளப்படும்.

**வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு**
**மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**
**கொழும்பு**

**2026 ஜூன் 12**

Foreign Affairs
විදේශ කටයුතු
வெளிநாட்டு அலுவல்கள்
Republic Building, Colombo 1
ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 1
குடியரசுக் கட்டிடம், கொழும்பு 1
☎ 2 325 373/5, 2 207 200/7
cypher@mfa.gov.lk

Foreign Employment
විදේශ රැකියා
வெளிநாட்டு வேலைவாய்ப்பு
17th Floor, "Mehewara Piyesa", Narahenpita, Colombo 5
17 වන මහල, "මෙහෙවර පියස", නාරාහේන්පිට, කොළඹ 5
17 அவது தளம், "மெஹெவர பியெச", நாரஹேன்பிட்டி, கொழும்பு 5
☎ 2 331 200
info@mfe.gov.lk

Tourism
සංචාරක
சுற்றுலாத்துறை
No 03, Times Building, Bristol Street (Sir Razik Fareed Mw), Colombo 1
අංක 03, ටයිම්ස් ගොඩනැගිල්ල, බ්‍රිස්ටල් වීදිය (සර් රාසික් ෆරීඩ් මාවත), කොළඹ 1
இல.03, டைம்ஸ் கட்டிடம், பிரிஸ்டல் தெரு (சர் ராசிக் ஃபரீத் மாவத்தை), கொழும்பு 1
☎ 2 381 798, 2 321 222
secretary@tourismmin.gov.lk